# சாதி ஒழிப்பும் குருதிக் கொடையும்-

அதியமான் (நிறுவனர் - ஆதித்தமிழர் பேரவை)

உலக அரங்கில் பல்வேறு நாடுகளில் வசிக்கும் பல்வேறு இன, சமய, சாதி மக்களால், நிறத்தின் காரணமாக இழிவும், சமயத்தின் காரணமாக, சாதியின் காரணமாக பழிப்பும் மக்களிடையே சாதரணமாக இருந்து வருகிறது.

அமெரிக்கா போன்ற நாடுகளில் நிறத்தின் காரணமாகவும், இந்தியா போன்ற நாடுகளில், சாதியின் காரணமாகவும், பல கோடி உழைக்கும் மக்கள் இழிவு படுத்தப்பட்டு ஒதுக்கபடுகின்றனர்.

உழைக்கும் மக்களை சுரண்டுவதற்கு இந்த இனம், நிறம், சாதி ஆகியவை பயன் படுகின்றன. ஆனால் இது ஆண்டவனால் படைக்கப்பட்டது என்று பலரும் நம்பினாலும் பூகோள ரீதியில் உள்ள தட்ப வெட்ப நிலைகளுக்கேற்ப மட்டுமே, நிறமும் பண்பாடும் அமைகிறது என அறிவியல் அறிஞர்கள் கருதுகிறார்கள்.

சுமார் 102 கோடி மக்கள் தொகைக்கும் அதிகமான இந்தியாவில் 35 கோடி தலித் மக்களும், 6 கோடி மக்கள் வாழும் தமிழகத்தில் 1.50 கோடி தலித் மக்களும் வாழ்கிறார்கள். இம்மக்கள் சாதியாலும், சமயத்தாலும், மொழியாலும் வேறுபட்டு நின்றாலும், மனித குலம் ஒன்றே என்பதை நாளும் நிரூபித்து வருவது குருதி கொடை மட்டுமே.

மக்கள் பல்வேறு விதத்தில் வேறுபட்டு நின்றாலும், குருதியின் வகைகள் மட்டும் உலகம் முழுவதும், மாறாமல் உள்ளது இது மிகவும் வியப்பான அறிவியல் உண்மையாகும். மனிதன் இறக்கும் தருணத்தில் மட்டுமே தன்னை விட தாழ்ந்தவனாகக் கருதும் ஒருவனுடைய குருதியை ஏற்றுக்கொள்ளும் மனநிலைக்கு வருகிறான்.

இந்த மனப் போராட்டத்தில் உண்மையி-லேயே சாதி என்னும் பேய் ஒழிகிறது. உண்மையில் சாதி என்பது இல்லை என்றாலும், அது கற்பனைஎன்று தெரிவதற்குக் கூட இந்த குருதிக் கொடை பயன் படுகிறது. இப்படிப்பட்ட குருதிக் கொடையை வழங்குவதால் ஒரு சாரசரி மனிதன் எவ்விதத்திலும் பாதிப்படைவது இல்லை. தொற்று நோய் இல்லாத, சராசரி உடல் நலமுடைய அனைவரும், குருதிக் கொடை வழங்கலாம் இதனால் பல உயிர்கள் வாழ்வதற்கு வழி பிறக்கின்றன.

பொருளாதாரத்திலும், சமூக நிலையிலும் சமத்துவம் இல்லாத, இந்த உலகில் மனிதனை, சிந்திக்க வைத்து, மனிதனை மனிதனாக நினைக்க - சிந்திக்க - மாபெரும், ஆற்றல் வாய்ந்த செயல்பாடாக, குருதிக் கொடை விளங்குவதுடன் மனிதர்களுடைய வேறு பாடுகளைக் கடந்த சமத்துவத்தை குருதிக்கொடை ஏற்படுத்துகிறது.

இப்படி பட்ட மகத்தான ஒரு பணியை ஏற்று செயல்படுத்தும், காருண்யா குருதிக் கொடை அமைப்பில் நாடு முழுவதும், 25,000-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர் என்பது, மிக பெரிய சாதனையாகும் அனைத்துக்கும் மேலாக ,இந்த குருதிக் கொடை இயக்கத்திற்கு , மும்மொழியில் வெளிவரும் என்லைட்டர் என்கிற மாத இதழ் கீரிடமாகி விளங்குகிறது. மேலும், இப்பத்திரிக்கை மூன்று மொழிகளில் வெளிவருவதால் அனைத்து தர மக்கள் படித்து பயன் அடைகிறார்கள். இதன்மூலம், சமூகத்தின், ரத்த தானத்தைப் பற்றிய பயம், சுயநலம் போன்றவைகள் அகன்று மக்கள் சேவையில் பலரும் இணைய வாய்ப்பகள் ஏற்படுகிறது.

இவர்களின் இப்பணி மேலும் செழித்து விளங்கிடவும் மக்களிடையே சமத்துவ உணர்வு மேலோங்க இப்பணியில் நம்மையும் நாம் இணைத்து கொள்வதுடன் நேசம் நிறைந்த வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

ரத்த வெள்ளை அணுக்களை உடலின் படை வீரர்கள் என்று அழைக்கலாம். ஏனெனில் உடலுக்குள் நுழையும் நோய்க்கிருமிகளை முதலில் எதிர்த்துப் போரிடுபவை ரத்த வெள்ளை அணுக்களே. இவை நோய் எதிர்ப்புச் சக்தியின் முக்கிய ஆதாரம்.

**Donate Blood | Save Life**

## மாரடைப்பு வரும் வாய்ப்பை இரத்தத்தானம் குறைக்கிறது

பின்லாந்து டாக்டர் ஜீக்கர் சாலனென் கோபியே பல்கலைக்கழகத்தில் இரத்ததானம் மாரடைப்பு நோய் வரும் வாய்ப்பை குறைக்கிறது என்று தன் ஆய்வை அமெரிக்கன் ஜர்னல் ஆப் எபிமாலஜி (1998) - ல் வெளியிட்டுள்ளார். இவர் தனது ஆய்வை 9 ஆண்டுகள் 2.862 நடுத்தர வயது பின்லாந்து ஆண்களிடம் மேற்கொண்டதில் இரத்ததானம் இரண்டு ஆண்டுகளுக்குள் ஒரு தடவை கொடுத்தவரை சேர்த்தாலும் கூட 0.7% மாரடைப்பு நோய் தாக்கியது எனவும், இரத்த தானம் கொடுக்காத நபர்களுக்கு 12.5% ஏற்பட்டதாகவும் தெரிவிக்கிறார். இவ்வாராய்ச்சியாளர் இரத்தத்தில் உள்ள இரும்பின் அளவு குறைவு இதற்கு காரணமாக இருக்கலாம் என கூறுகின்றார்.

இதேபோல், கான்வாஸ் பல்கலையில் உள்ள மருத்துவமனை ஆய்வில் இரத்த தானம் கொடுப்பவருக்கு 30% மற்றவர்களை காட்டிலும் குறைவாக மாரடைப்பு ஏற்படுவதாகக் கூறுகிறார். இவர் இதற்கான காரணமாக கூறுவது, பூப்பெய்திய பெண்கள் மாதவிலக்கு ஓய்வு ஏற்படும்வரை மாரடைப்பு குறைவாக ஏற்படுவது போலவே இதுவும் என்று கூறுகிறார்.